# ஸ்ரீ வெங்கடேஷ்வரா மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம்

அரியூர், புதுச்சேரி - 605 102

## நோய்தணிப்பு சிகிச்சை
## (பேலியேடிவ் கேர்)

இந்தியாவில் தற்பொழுது மருத்துவத்துறையில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளது. அநேக வியாதிகள் நவீன சிகிச்சை முறைகள் மூலம் குணப்படுத்தப்படுகின்றன அல்லது கட்டுப்படுத்தப்படுகின்றன. அதே சமயம் சில நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டாலும் பூரணமாக குணப்படுத்த முடியாத சூழ்நிலை உள்ளது. எப்படியும் இந்நோயாளிகள் பழைய இயல்பான நிலையை அடையப்போவதில்லை அல்லது நீண்ட நாட்கள் உயிர் வாழப்போவதில்லை என்ற கட்டத்தில் மருத்துவர்கள் அவர்தம் குடும்பத்தினரிடம் இதற்குமேல் மருத்துவத்தில் பெரிதாக ஏதும் செய்தாலும்கூட முழுமையாக குணப்படுத்த வழியில்லை. ஆகையால் இவர்கள் உயிருடன் இருக்கும் வரை வீட்டில் வைத்து நன்றாக கவனித்துக்கொள்ளவும் என்று அனுப்பிவிடுவர். சில நாட்கள்/வாரங்கள் முதல் சில மாதங்கள் வரை உயிருடன் இருக்கும் இந்த நோயாளிகள் வீட்டில் வியாதியின் தன்மைகேற்ப உணவருந்த இயலாமல், மிகுந்த உடல்வலி, வாந்தி, மூச்சு கஷ்டம் மற்றும் இதர பல வேதனைகளுடன் இருப்பர். இவர்களை கவனித்துக்கொள்ளும் குடும்பத்தினரும் என்ன செய்வது என்று அறியாமல் துன்புறுவர்.

இந்நிலையில் இருக்கும் நோயாளிகள் மற்றும் அவர்கள் குடும்பத்தினருக்கு அளிக்கப்படும் மருத்துவ உதவிக்கரமே **நோய்தணிப்பு சிகிச்சை (பேலியேடிவ் கேர்)** ஆகும்.

இந்த சிகிச்சையின் பயனாளிகள் என்று பார்த்தால் முற்றிய நிலையிலுள்ள புற்றுநோயாளிகள் (கேன்சர்), தீவிர இதயம், சிறுநீரகம், நுரையீரல், மற்றும் ஈரல் சம்மந்தமான நோய்களால் குணமடையாதவர்கள், டிமென்சியா (ஞாபகமறதி), முற்றிய எய்ட்ஸ், பார்கின்சன் (நடுக்குவாதம்), இரு கைகால் வாதம் போன்ற நரம்பு பாதிப்புகளால் சுயமாக வாழ இயலாதவர்கள், கேன்சரினால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகள், சரி செய்ய இயலாக்குறைகளுடன் பிறந்த குழந்தைகள், படுத்தப்படுக்கையாக உள்ள முதியோர்கள் ஆவர். பொதுவாக சாதாரண வாழ்க்கையைக் கட்டுப்படுத்தும் அனைத்து நோய்களும் இதில் அடங்கும். வியாதியின் தன்மைகேற்ப மற்ற சிகிச்சை முறைகளுடன் சேர்ந்தே நோய்தணிப்பு சிகிச்சையை அளிக்கலாம்.

பொதுவாக மருத்துவத்துறையில் ஒரு நோயாளிக்கு உடல்ரீதியாக குணமடைய சிகிச்சை அளிக்கப்படுவதைப் பார்க்கிறோம். ஆனால் நோய்தணிப்பு சிகிச்சை என்பது ஒரு நோயாளியை முழுமையாக அதாவது அவரின் உடல், மனம், சமூக மற்றும் ஆன்மீகரீதியாக அணுகுவதே ஆகும். இச்சிகிச்சை மூலம் நோயாளிகள் மற்றும் அவர்கள் குடும்பத்தினரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. இச்சிகிச்சை முறையில் பேலியேடிவ்கேர் பயிற்சி பெற்ற மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள், இயன்முறை மருத்துவர்கள் (பிசியோதெரபிஸ்ட்), சமூக சேவகர்கள், குடும்ப உறுப்பினர்கள், தன்னார்வலர்கள் ஒரு குழுவாக இணைந்து செயல்படுகிறார்கள்.

உதாரணத்திற்கு இந்த சிகிச்சையில், ஒரு புற்றுநோயாளியின் வலி, நோய் முற்றியதினால் ஏற்படும் பின்விளைவுகள் மற்றும் மனவேதனை ஆகியவற்றை குறைக்க முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. மார்ஃபின், ட்ரமடால் போன்ற வீரியமான வலி நிவாரண மருந்துகள் அளிக்கப்படுகிறது. நோயாளி வீட்டில் இருந்து கொண்டோ அல்லது சில சமயங்களில் மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்ந்தோ இந்த சிகிச்சையைப் பெறமுடியும். படுத்தப்படுக்கையாக முழு உடல் செயலிழந்து இருக்கும் நோயாளிகளுக்கு தோல் புண், வாய் துர்நாற்றம் போன்ற உபாதைகள் வராமலிருக்க உடல் பராமரிப்பு முறைகள் செய்யப்படுவதுடன் அவர்களது குடும்பத்தினருக்கும் கற்றுத்தரப்படுகிறது. நோயாளி இறந்த பிறகும் அந்த குடும்பத்தினரின் துக்கம் மற்றும் கவலைகளைப் போக்க, மனவலிமையுடன் இழப்பை எதிர்கொள்ள ஆலோசனைகள் வழங்கப்படுகின்றது.

ஒரு நோயாளிக்கு எதுவும் இனி செய்ய முடியாது என்கிற நிலை இந்த சிகிச்சையில் இல்லை. ஏதேனும் ஆக்கபூர்வமாக செய்ய முடியும் என்பதே **பேலியேடிவ் கேரின்** குறிக்கோள் ஆகும். நோய்தணிப்பு சிகிச்சை தேவையானவர்களுக்கு கிடைக்க வேண்டும். அதற்கு நாம் அனைவரும் முயற்சிக்க வேண்டும்.

இந்த சேவையில் அரியூர் **ஸ்ரீ வெங்கடேஷ்வரா மருத்துவக்கல்லூரி மருத்துவமனை,** திருவனந்தபுரத்தில் உள்ள தேசிய அளவில் புகழ்பெற்ற நோய்தணிப்பு சிகிச்சை ஸ்தாபனமான "பேலியம் இந்தியா " நிறுவனத்தின் ஆதரவுடன் செயல்படத் துவங்கியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். இச்சிகிச்சை தேவைப்படுகிறவர்கள் எங்கள் மருத்துவமனையில் புறநோயாளிகள் அல்லது உள்நோயாளிகள் பிரிவில் சேர்ந்து பயன் பெறலாம்.

<u>இந்த சிகிச்சை பற்றி மேலும் அறிய தொடர்பு கொள்ளவும்</u>


## நிர்வாக அதிகாரி

ஸ்ரீ வெங்கடேஷ்வரா மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம்

அரியூர், புதுச்சேரி.

**Ph : 0413 - 2260601 / 97866 55411 / 9489325306**